Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 218
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 1 ஜ ஆகி 11 ஞாயிற்றுக்கிழமை [17-9-7]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா
பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# காணியில்லாத ஹரிஜன மக்களுக்கு சொந்த நிலம்

## அச்சுவேலியில் மேலும் 54 வீடுகள் அமையும்

யாழ்ப்பாணம், ஞாயிறு
அச்சுவேலியில் 1967ம், 68ம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் மேலும் 54 வீடுகளை தேசிய வீடமைப்புத்திட்டத்தின்கீழ் அமைக்க அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

இங்குள்ள சேரிப் பகுதி மக்களுக்கும், ஹரிஜனமக்களுக்குமாக இங்கு இப்போதும் வீடமைப்புத்திட்டத்தின்கீழ் 54 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இங்கு அமைக்கப்படவிருக்கும் வீடுகளின் முழு வேலைகளும் இவ்வருட முடிவில் பூர்த்தியடையும். அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் முதல் திட்டத்தின்கீழ் தற்போது கட்டப்படும் 54 வீடுகளிலும் மக்கள் குடியேற்றப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த வருடத் திட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் புதிய 54 வீடுகளுக்கான ஆரம்பவேலைகள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடைபெறுமெனத் தெரிகின்றது. இப்பொறுப்புகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி மாணிக்கவாசகரின் கவனத்துக்கு. உள்ளூராட்சிஅமைச்சினால் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் நம்பகமாகத் தெரிய வந்துள்ளது. [ந நி.]

## யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய திட்டம் அமுலாகும்

— நமது நிருபர் எஸ். திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், ஞாயிறு

சொந்தக் காணியில்லாது பிறரது காணியில் குடியிருந்துவரும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஹரிஜன மக்களுக்கென புதிய குடியேற்றத் திட்டமொன்றை காணி அமைச்சு தயாரித்துள்ளது.

இதற்கான பொறுப்புக்களை காணி அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளையிடம் ஒப்படைத்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்படுவதற்காக பிறரது காணியில் குடியிருந்து வருபவர்களின் விபரங்களை அவ்வப்பகுதி கிராம சேவகர்களும் காரியாதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் உதவி அரசாங்க அதிபரின் உத்தரவின்பேரில் சேகரிக்கத்தொடங்கியுள்ளார்கள்.

சொந்தக் காணியில்லாது பிறரது காணியில் குடியிருக்கும் ஹரிஜனர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகபயன் பெறும் வகையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத்தெரிகிறது.

இப்புதிய திட்டத்தின்பிரகாரம் காணியற்றிருக்கும் இச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள் முதலில் தாமிருக்கும் இடங்களுக்கு அண்மையிலுள்ள முடிக்குரிய காணிகளில் குடியேற்றப்படுவார்கள். முடிக்குரிய காணிகள் இல்லாத இடங்களில் அதிகமான காணிகள் வைத்திருப்பவர்களின் காணிகளை அரசாங்கம் சட்டபூர்வமான வகையில் விலை கொடுத்து வாங்கி இவர்களைக் குடியேற்றும் என அறியப்படுகிறது. இவ்விதம் மேலதிக காணிகள் இல்லாத இடங்களில் வசிக்கும் ஹரிஜனத் தமிழர்கள் வெளியிடங்களிலுள்ள புதிய குடியேற்றத்திட்டங்களில் குடியமர்த்தப்படுவார்கள். ஒவ்வொரு தொகுதியிலும்உள்ள முடிக்குரியகாணிகள், மேலதிக சொந்தக் காணிகள், ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கைபோன்ற புள்ளிவிபரங்கள் இப்பொழுது சேகரிக்கப்பட்டுவருகின்றன. இவைகள் விபரமாக சேகரிக்கப்பட்ட பின்னர் இத்திட்டம் விரைவாக செயல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.அரசாங்கசெயலகத்தில் சிங்களச்சட்டம் அமுல்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாண அரசாங்கச் செயலகத்தில் அரசகரும மொழியைப் பூரணமாக நடைமுறைக்குக்கொண்டு வரும் நடவடிக்கைகளில் சில முக்கிய அதிகாரிகள் நாட்டம்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. இதனால் ஆங்கிலம் கூடத் தற்போது புறக்கணிக்கப்படுகின்றதாம்

யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலக காணி அலுவலகமே இந்த நடவடிக்கைக் கெடுபிடிக்குள் முதலாவதாகச் சிக்கியுள்ளதாகத் தெரியவருகின்றது இதுவரை காலமும் இங்கிருந்து கடிதங்களும், குறிப்புகளும் அமைச்சுக்கு ஆங்கிலத்திலேயே அனுப்பப்பட்டுவந்தன. ஆனால் காணிக் கமிஷனர், யாழ்ப்பாணம் காணி இலாகா அதிகாரிகளுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இங்கிருந்து அனுப்பப்படும் சகல கடிதங்களு அரசாங்கக் குறிப்புகளும் ஆங்கிலத்தில் மாத்திரம் எழுதப்படுவதெனத் தனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதென்றும், இனிமேல் அரசகரும மொழியிலேயே இத்தொடர்புகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளாராம். [ந.நி]

## உப உணவுச் செய்கைக்கு 6500 ஏக்கர் நிலம்

உடுப்பிட்டி, சனி
உப உணவு உற்பத்தித் துறையில் அரசாங்கம் தீவிர கவனமெடுத்துவருகிறது. கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் 13,000 ஏக்கர் நிலம் நெற் செய்கைக்கும், 1000 ஏக்கர் நிலம் மிளகாய்ச் செய்கைக்கும், 300 ஏக்கர் நிலம் வெங்காயச் செய்கைக்கும், 100 ஏக்கர் நிலம் வேறு பயிர்ச்செய்கைக்கும் ஒதுக்கப்படும். 6,500 ஏக்கர் நிலம் உப-உணவுப் பயிர்ச்செய்கைக்கு ஒதுக்கப்படும். இந்நிலத்தில் வெங்காயம் பயிரிடப்படும் இவ்வருடம் இலங்கையிலுள்ள இளைஞர் குடியேற்றத்திட்டங்களில் 200 இளைஞர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இத்தகவலையாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஜே.எம். சபாரத்தினம் கரவெட்டி கிழக்கு அத்துளு குளத்திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் பேசுகையில் வெளியிட்டார்.

### சைவசமய பாட பரீட்சை

கொழும்பு, சனி
கொழும்பு விவேகானந்த சபை இவ்வருடம் நவம்பர் மாதம் 9-ந்திகதி நடாத்தவிருக்கும் சைவசமயபாடப் பரீட்சைக்கு இம்மாதம்30-திகதிவரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் நாள் பிற்பகலில்ஆறுமுகநாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டியும் நடைபெறுமெனவும் விவேகானந்தசபைப் பரீட்சைக்காரியதரிசி தெரிவித்துள்ளனர்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## எதிரிகள் இருவருக்கும் 7 வருட கடூழியச் சிறை

### தெல்லிப்பளை கொலைவழக்கில்தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
தெல்லிப்பளை கொலை வழக்கில்எதிரிகள் இருவருக்கும் தலா ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

ஜூரி சபையினர் ஏகமனதாக எதிரிகள் கொலைக் குற்மாகாத கைமோசக்கொலைக் குற்றத்துக்கு குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தனர். இதனைத் தொடர்ந்தே நீதியரசர் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் தெல்லிப்பளையில் 1966-ம் வருடம் ஏப்ரல் மாதம் 7-ம் திகதி முதலி சின்னவனை, ஆண்டி முதலி, நீலன் முருகன் ஆகியோர் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

[6-ம் பக்கம் பார்க்க]

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு
டொலர்
ONE DOLLAR
அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும் சத்தியம் மறுபடியும் எழுந்து நிற்கவே செய்யும். ஆண்டவனுடைய அந்தமில்லா ஆண்டுகள் அதற்கும் உண்டு.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵ புரட்டாதி௴ 1௳ 17-9-67)


## இந்திராவின் வருகை

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நாளை கொழும்பு வந்து சேருகிறார் மூன்று தினங்கள் இலங்கையில் தங்கியிருந்து கண்டிக்கும் மற்றும் சில இடங்களுக்கும் செல்லவிருக்கும் திருமதி இந்திரா இலங்கையின் வடபகுதிக்கு விஜயம் செய்ய ஒழுங்கு செய்யப்படாத போதிலும் அவரை வரவேற்கும் லட்சக்கணக்கான அன்புள்ளங்களுடன் நாமும் சேர்ந்து "வருக, வருக; தங்கள் வரவு நல்வரவாகுக" என்று நல்வாழ்த்துக் கூறி வரவேற்கிறோம்.

இந்தியப் பிரதமர் ஒருவர் இங்கு வருவதோ, திருமதி இந்திரா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்வதோ இது தான் முதல் தடவையல்ல. இதற்கு முன்னர் 1928ம் ஆண்டிலும் 1930ம் ஆண்டிலும். ஐந்து வருடங்களுக்கு முன்னரும்கூட திருமதி இந்திரா காந்தி இலங்கைக்கு வந்திருக்கிறார். அப்போதெல்லாம் இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால்நேருவின் புதல்வியாகவும், சமூகசேவகியாகவும், சுதந்திரப் போராட்ட இந்திய வீராங்கனைகளில் ஒருவராகவுமே அவர் வந்தார். இப்போது இந்தியாவின் பிரதமமந்திரியாகவும் நல்லெண்ணத் தூதராகவும், நட்புறவின் சின்னமாகவும் திருமதி இந்திரா காந்தி இங்கு வருகிறார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பிரச்னைகள் எதுவுமில்லை. இதுவரை இருந்து வந்த இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னைகூட சுமுகமாகத் தீர்வதற்கு வழிவகைகள் காணப்பட்டுவிட்டன. இதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பமாகிவிட்டன. எனவே இரு நாடுகளுக்குமிடையில் பிரச்னை எதுவுமில்லையென்றே சொல்லலாம்.

ஆனால் இலங்கையும் இந்தியாவும் நெருங்கி ஒத்துழைக்க வேண்டிய பிரச்னைகள் பல உள. இரு நாடுகளுக்குமிடையிலுள்ள சமய, கலாசார உறவுகள்பற்றி யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உலகின் இன்றைய நிலையில் ஆசியநாடுகளுக்கிடையில் குறிப்பாக கோஷ்டி சேராக் கொள்கையைப் பின்பற்றும் இலங்கை, இந்திய நாடுகளுக்கிடையில் ஒற்றுமையும் நெருங்கிய ஒத்துழைப்பும் பரஸ்பர நம்பிக்கையும் நட்புறவும் இருக்க வேண்டியது அவசியம். ஆசிய நாடுகளுக்கிடையில் ஒற்றுமை இல்லாதிருப்பதும் அவைகளுக்குள் அவநம்பிக்கை நிலவுவதுமே ஆசிய நாடுகள் பலவும் பின்தங்கிய நிலையிலிருப்பதற்குக் காரணமாகும்.

வர்த்தகம், பொருளாதாரத் துறைகளில் இரு நாடுகளும் முன்னேற்றமடைவதற்கும் ஆசிய நாடுகளுக்கிடையில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்படுவதற்கு வழி காணவும் இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் உதவி புரியுமென எதிர்பார்க்கலாம்.

# 'பாரதிக்கு இலங்கையில் சிலை எழுப்பவேண்டும்'

வெள்ளவத்தை, சனி

'பாரதியாரின் தெய்வீகப் பாடல்கள், மனதிற்கும் செவிக்கும் இனிமையைக் கொடுப்பவை. பராசக்தி தேவியையும், முருகனையும் துதித்து அவர் வெகு அழகாகப் பாடியுள்ளார். பொதுவுடைமைக்கருத்துக்களையும் மூடக் கொள்கைகளைத் தகர்த்தெறியும் கருத்துக்களையும் வைத்து மிகவும் உணர்ச்சிகரமான பாடல்களைப் பாடிய மக்கள் கவிஞன் பாரதி. இக் காலத்தில் இளைஞர்கள் பாரதியை மிகவும் போற்றுகிறார்கள். ஆனால் பாரதி பாடிய மாகாளி பராசக்தியை அவர்கள் போற்றவில்லை. தெய்வத்தையும் தெய்வீகத் தன்மைகளையும் போற்றித் துதிக்க தயங்குகிறார்கள். இந்த அவனியை வழிப்படுத்தும் பரம்பொருள் என்று ஒன்று இருக்கிறது என்பதை எல்லோரும் நம்பவேண்டும்."

இவ்வாறு உணுப்பிட்டியில் நடைபெற்ற பாரதி விழாவில் அகில இலங்கை தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. கோ. பாக்கியராசா பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "தமிழ்நாட்டில் சென்னைக் கடற்கரையில் பாரதிக்கும், பாரதிதாசனுக்கும், சிலை எடுக்க முன்வந்திருக்கிறார்கள். இலங்கையிலும் தமிழ்மொழியின் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் பாடிய பாரதிக்குச் சிலை எழுப்பவேண்டும். அதுவும் கொழும்பிலே ஒரு மையமான இடத்தில் அமைக்க வேண்டும்" என்று கூறினார்.

திரு எம். சிங்கராயர் பேசுகையில், "பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திடவேண்டும் . ." என்று பாடிய பாரதியின்பாடல்கள் இன்று தமிழ்மக்களிடையே ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியன. பாரதி ஒரு இனவெறியன் என்றோ அல்லது தமிழ்மொழியில் அதிகளவு வெறிகொண்டு வகுப்புவாதம் பேசுகின்றவன் என்றோ எவரும் எண்ணிவிடமுடியாது. அவனது உள்ளம் பரந்தது. தேசியக் கவி அவன்..." என்று கூறினார்.

திருவாளர்கள் க. ஞானேஸ்வரன், க. பேரம்பலம் ஆகியோரும்பேசினர்.

### சி.டபிள்யூ. ஈ. முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிறிது பழுதடைந்த துணிகளை இனிமேல் பதியப்பட்ட தர்மஸ்தாபனங்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்க சி. டபிள்யூ. ஈ. வர்த்தக ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இதற்கான ஒழுங்குகளை சமூக சேவைப் பகுதி டைரக்டர் திரு. ஆர். எல் திருச்செல்வம் சி. டபிள்யூ. ஈ. ஸ்தாபன அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் செய்துள்ளார்.

சி. டபிள்யூ. ஈ. ஸ்தாபனத்தாரின் சிறிது பழுதடைந்த வீட்டுப்பாவனைக்கான துணிகளைப் பெற விரும்பும் பதிவு செய்யப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் சமூக சேவைப் பகுதி டைரக்டருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர் [வி. நி]

### கிளிநொச்சியில் வாடி வீடு அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சியில் புதிய வாடி வீடொன்றை அமைப்பதற்கு உள்நாட்டு அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இதற்கான ஆரம்பவேலைகள் அநேகமாக அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஆரம்பமாகுமென எதிர் பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழுவில் தீர்மானித்ததற்கிணங்க, கிளிநொச்சியில் வாடி வீடு அமைக்க அனுமதி வழங்கியுள்ள அமைச்சு இது பற்றிய பூரண விபரங்களையும் தற்போது வடபகுதி அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளது அத்துடன் காணி அபிவிருத்தி டைரக்டரிடம் அதற்கான காணி வழங்குமாறும் கோரியுள்ளதாகத் தெரிகின்றது. தற்போது கிளிநொச்சியிலிருப்பது அரசாங்க தங்கு விடுதியாகும். [ந. நி]

## சீன-இந்திய எல்லை மோதல் பற்றி பேச்சுவார்த்தைகள்

### ரஷ்ய வெளியுறவு மந்திரியுடன் சுவண்ரசிங் நடத்தினார்

மாஸ்கோ, செப். 16

இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சுவரண்சிங், நேற்றுக் காலை மாஸ்கோவில், ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோவுடன் சிக்கிம்—திபெத் எல்லையில் நடைபெறும் இந்திய—சீன மோதல் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இப்பேச்சுவார்த்தைகள், திரு. குரோமிக்கோவின் வேண்டுகோளுக்கிணங்கவே நடைபெற்றதாக இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளில், இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சுவரண்சிங், சிக்கிம் எல்லையிலுள்ள நிலைமையை உள்ளபடியே திரு. குரோமிக்கோவிடம் விவரித்ததாகக் கூறப்படுகிறது.

**மற்ற பிரச்னைகள்**

மற்றும் வியட்னும், தென் கிழக்காசிய, மேற்காசிய நிலைமை எதிர்வரும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கூட்டம் ஆகிய விஷயங்களும் இப்பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்றன.

நேற்று, ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோ அளித்த பகற்போசன விருந்தில், இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சுவரண்சிங் கலந்துகொண்டார்.

### விஜயத்தின் நோக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியில் குடிசைக் கைத்தொழில் நுட்பத்தில் துரிதமாக முன்னேறிவரும் பண்ணை அங்கவீனர்கள் வடபகுதியில் குடிசைக் கைத்தொழில் பகுதியின் கீழ் இயங்கும் குடிசைக் கைத்தொழில் நிலையங்களையும் தும்புத்தொழிற் சாலைகளையும் சமூக சேவைப் பகுதியின் உதவியுடன் சென்று பார்வையிட்டனர்.

தமது உற்பத்திப்பொருட்களை மேலும் தரம் உயர்த்தும் நோக்கமாகவே அங்கவீனர்கள் இக் கைத்தொழில் நிலையங்களைப் பார்வையிட்டதாகத் தெரிய வருகிறது. (வி. ந)

### சர்வதேச பஹாய் மகாநாடு

வெள்ளவத்தை, சனி

வரும் அக்டோபர் மாதம் 4-ம் திகதி முதல் 7-ம் திகதி வரை புதுடில்லியில் நடைபெறவிருக்கும் சர்வதேச பஹாய் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கென இலங்கை [illegible] பிரதிநிதிகள் இந்தியா செல்லவிருக்கின்றனர்.

### தோட்டத்தில் கை கலப்பு

கொத்மலை, சனி

கொத்மலையைச் சேர்ந்த திஸ்பனைத் தோட்டத்தில் இரு சங்கத்தவர்களிடையே நடந்த கைகலப்பில் முத்துசாமி, தேக்கன், சுப்பிரமணியம் ஆகியோர் காயங்களுடன் நாவலப்பிட்டி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். நாவலப்பிட்டிபொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

### இன்றைய பலன்

17-9-67
ஞாயிற்றுக்கிழமை
(புரட்டாதி மாதம் 1௳)

நட்சத்திரம்-சதயம் பி. இரவு 12 45 வரை மேல் பூரட்டாதி.

திதி- சதுர்த்தசி இரவு 9-34 வரை மேல் பூரணை.

சுபநேரம்-9-03—10-33

ராகுகாலம்- 4-33—6-03

மேஷம்-காரியதாமதம், கவலைமிகுதி.

ரிஷபம்-பகைமை நீங்கும், பந்துக்கள் வரவு.

மிதுனம் - மகிழ்ச்சியின் உச்சம், மனநிறைவு.

கடகம்-கவலையின் தாக்குதல், கலக்கம்.

சிம்மம்-இல்லறச் சிறப்பு, இனியதுகேட்டல்.

கன்னி-நாசம் விளையும், நம்பிக்கை வேண்டாம்.

துலாம்-இறையருள், இன்புற்று வாழ்தல்.

விருச்சிகம்- தொழில் நலன், ஊக்கமிகுதி.

தனுசு-நினைத்தது நடக்கும், தனவிருத்தி.

மகரம்- பொருள் கைவிட்டுப் போகும், பொறுமை வேண்டும்.

கும்பம்-சகோதர சுகம், இனிய நாள்.

மீனம்-வாக்குப்பலிதம், வாழ்த்துமுண்டு.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## ஐயாறன் எழுதுவது

கிருஷ்ணமேனன் அவர்களை அசைப்பில் பார்த்தால் யார் மாதிரி இருக்கிறது தெரியுமா. நமது 'ரிலிஜியஸ் டைஜஸ்ட்' ஆசிரியரான ராமச்சந்திரா போலவேதான். மேலே வெள்ளை கதர் ஜிப்பா. மடித்துப்போட்ட சரிகை அங்கவஸ்திரம். இடுப்பில் நான்கு முழ தட்டுச் சுற்று வேட்டி. இந்த எளிய ஆனால் தூய உடையுடன் அவர் கொழும்பு புதிய நகரமண்டபத்தில், ஆவலுடன் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் மனதையும் கவர்ந்தார்.

உலகப்புகழ்பெற்ற இந்த அரசியல் வாதியின் பேச்சைக் கேட்க நீதி அரசர் தம்பையா, ரஷ்ய, ஐ. அரபு குடியரசு ஸ்தானிகர்கள், முன்னாள் அமைச்சர்களான இலங்கரத்ன, மகம்மது முதலிய பல பிரமுகர்கள் வந்திருந்தனர். அவரது கூட்டத்துக்கு இந்த மண்டபம் போதவேபோதாது. பெருங்கூட்டம் வெளியிலிருந்து கண்ணாடிக்கதவுகளை உடைத்துப்பெருங்கூச்சலிட்டது. ஜன்னல் கதவுகளை எல்லாம் திறக்கவே கூட்டம் உள்ளே நுழைந்தது. பெருங் கலாட்டா ஏற்படுமோ என்று தோன்றிய போதிலும், மேனன் பேச எழுந்ததும் எங்கும் ஒரே நிசப்தம்.

"ஆசிய-ஆபிரிக்கநல்லுறவு சங்கத்தின் விருந்தினராகவே இங்கு வந்தேனாயினும், உங்கள் எல்லாருடைய விருந்தினனே நான்" என்று அவர் பேச்சை கரகோஷத்துடன் ஆரம்பித்து, "மத்திய கிழக்கு" என்ற முக்கியமான விஷயம்பற்றி பேசினார். நகைச்சுவை, கிண்டல் எல்லாம் நிறைந்திருப்பினும் அர்த்த புஷ்டி வாய்ந்ததாயும் கேட்போரைச் சிந்திக்கத்தூண்டுவதாகவுமிருந்தது. அவரது பேச்சு நல்லதோர் அரசியல் விருந்து. பல அரசியல் புத்தகங்களிலும் படித்தறிய முடியாத பல விஷயங்களை அன்றைய ஒரு பேச்சில் அறியக் கூடியதாக இருந்தது.

ஃ ஃ ஃ

"முன்காலத்தில் பிரிட்டன் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டது. ஆனால் இக்காலத்தில் பிரித்துவிட்டு வெளியேறும் தந்திரத்தைக் கையாளுகின்றது" என்று அவர் கூறியபோது மண்டபத்தில் ஒரே சிரிப்பு. பாகிஸ்தான், இஸ்ரேல் இவை ஏகாதிபத்திய வாதிகளின் சிருஷ்டி என்றும், பத்து வருடங்களுக்கு முன் ஆசிய, ஆபிரிக்க நாடுகளிடையே இருந்த ஒற்றுமை இப்போது இல்லை என்றும், அதனால் தான் இஸ்ரேல் தான் பிடித்த பகுதிகளைவிட்டு விட்டு பின்வாங்க மறுத்து பிடிவாதம் செய்கிறதென்றும் சொன்னார், அவர். ஒவ்வொரு நாட்டையும் இரண்டாக்கிப் பிளந்ததால் ஆசிய மக்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்புமில்லாமல் போய்விட்டதென்றார். இந்நிலையில் "ஆசிய-ஆபிரிக்க கூட்டணி" என்று கூறுவதில் என்ன அர்த்தமுண்டு? அக்கூட்டத்துக்கு சீன ஸ்தானிகரோ, சீனச்சார்புள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களோ வரவில்லை. மாஸ்கோ சார்புத் தலைவர்களைத்தான் காணமுடிந்தது. ஆசிய, ஆபிரிக்கமக்களிடையே வரவரப் பிளவுகளும் வேற்றுமையும் அதிகரித்துள்ளதேயன்றி, குறைந்ததாகத் தெரியவில்லை. இது எவ்வளவு பெரிய துரதிருஷ்டம்! இந்த அவல நிலை தீர என்ன வழி?

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஐ.அ.கு. உதவிப் பிரதமர் அமீர் அதிக மருந்து விழுங்கி தற்கொலை

## நாஸரைக் கவிழ்க்க முயன்ருரென வீட்டுக் காவலில்வைக்கப்பட்டவர்

கெயிரோ, செப். 16

முன்னாள் ஐக்கிய அரபுக் குடியரசு உதவிப் பிரதமரும், முப்படைகளின் உதவித் தளபதியும், அண்மையில் இஸ்ரேலுக்கெதிரான போரில் ஐ. அ. கு. இராணுவத்தைத் தலைமை தாங்கி நடத்தியவருமாகிய பீல்ட் மார்ஷல் அப்துல் அமீர், வீட்டுக் காவலிலிருக்கையில், தற்கொலை செய்து கொண்டு விட்டதாகக் கெயிரோ ரேடியோ அறிவித்துள்ளது.

ஐ. அ. கு. ஜனதிபதி நாஸரின் ஆட்சியைக் கவிழ்க்கச் சதிசெய்த குற்றச்சாட்டின் பேரில் பீல்ட் மார்ஷல் அமீர் இம்மாதத் தொடக்கத்திலிருந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இராணுவ நீதிமன்ற விசாரணை ஒன்றுக்கு ஆஜராகும்படி அவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் அதிக மருந்துகளை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டதாக, அதிகாரபூர்வமான ஒலிபரப்பொன்றில் கெயிரோ ரேடியோ தெரிவித்தது.

### மருந்துகள் உட்கொண்டார்

சென்ற புதன்கிழமையன்று, அமீரின் வாசஸ்தலத்துக்குச் சில இராணுவ அதிகாரிகள் சென்றபோது, அதிக மருந்துகளை உட்கொண்டதன் விளைவாக அவர் மோசமான உடல் நிலையில் இருக்கக் காணப்பட்டார். அவருக்கு உடனடியாக வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது உடல்நிலையும் ஓரளவு சீரடைந்தது. ஆனால் வியாழனன்று, தம்முடைய உடம்பிலே ஒளித்து வைத்திருந்த மருந்துகளை அவர் மீண்டும் உட்கொண்டதனால், அவர் மரணமானார். இவ்வாறு கெயிரோ ரேடியோ கூறியது.

வியாழக்கிழமையே அமீர் இறந்துவிட்டபோதும் 24 மணி நேரம் தாமதிக்கப்பட்டே அவரது மரணச் செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 24 மணிநேர தாமதத்துக்கான காரணத்தை ரேடியோ வெளியிடவில்லை.

காலஞ்சென்ற பீல்ட் மார்ஷல் அமீரின் வயது 48 ஆகும். 1952ல் எகிப்து மன்னர் பாரூக்கின் ஆட்சியைக் கவிழ்த்த இராணுவத் தளபதி நாகிப்பின் இராணுவப் புரட்சியில் அமீரும் பங்கு பற்றியிருந்தார்.

### நாஸரின் வலது கரம்

நாகிப்பின் ஆட்சிக்கெதிராகப் புரட்சிசெய்து நாகிப்பைக் கவிழ்த்த நாஸரின் ஆட்சியில் அமீரும் முக்கிய பங்கு வகித்தார். படிப்படியாக நாஸரின் நம்பிக்கைக்காளான அமீர், அவரது வலதுகரமாக மிக அண்மைக் காலம்வரை விளங்கினார்.

ஆனல் இஸ்ரேலுடன் அண்மையில் நடைபெற்ற போரில், ஐ. அ. கு. இராணுவம், அமீரின் தலைமையில் பல தோல்விகளைக் கண்டது. இதன் காரணமாக நாஸர் அமீரைப் பதவியிலிருந்து நீக்கியிருந்தார்.

### சதிக் குற்றத்தில் கைது

பின்னர் நாஸர் ஆகஸ்ட் மாதக் கடைசியில், கார்டூமில் நடைபெற்ற அரபு நாடுகளின் உச்சி மகாநாட்டுக்குச் செல்லப் புறப்படுகையில் அமீரின் தலைமையிலான இராணுவச் சதிப் புரட்சிபற்றிய தகவல்கள் கிடைத்தன. அவர் உடனே அமீரையும் சம்பந்தப்பட்ட வேறு சில அதிகாரிகளையும் கைதுசெய்து வீட்டுக் காவலில் வைத்தார்.

## தேசாய்க்கு பாராட்டு

வாஷிங்டன், செப். 16

தற்போது அமெரிக்காவில் விஜயம் செய்யும் இந்திய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை 'இந்திய ஆட்சியின் தூண்' என அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான நியூயோர்க் டைம்ஸ் பாராட்டியுள்ளது. தேசாய் பற்றி அப்பத்திரிகையில் வெளியான இரண்டு பத்திக் குறிப்பிலேயே இந்த வர்ணனை அடங்கியுள்ளது.

பீகிங்கிலுள்ள

## இந்தோனேஷிய தூதரக ஊழியர்

ஜக்கார்த்தா, செப். 16

பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தைச் சேர்ந்த அனைவரையும் இந்தோனேஷிய அரசாங்கம் திரும்ப அழைத்துள்ளது. அவர்களுக்குப் பீகிங்கில் போதிய பாதுகாப்பு இல்லையென்ற காரணத்தினலேயே அவர்களைத் திருப்பி அழைப்பதாக இந்தோனேஷிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆனல், இந்தோனேஷிய தூதரகச் சிப்பந்திகள் சீனவைவிட்டு வெளியேறுவதற்கான பெர்மிட்டுகளைச் சீன இதுவரை வழங்கவில்லையெனத்தெரிகிறது.

## தி.மு.க. தொழிற்கொள்கை பற்றி திரு.சி. சுப்பிரமணியம்

சென்னை, செப். 1[6]

தி. மு. க. அரசாங்கம் தனது தொழிற்கொள்கையை சந்தேகத்துக்கிடமின்றி அறிவிக்கவேண்டுமென்றும், அத்துடன் அடுத்த 5 ஆண்டுகளுக்குத் தனது அலுவல் திட்டத்தையும் அறிவிக்கவேண்டுமென்றும் முன்னாள் மத்திய உணவு மந்திரி திரு. சி. சுப்பிரமணியம், திருவல்லிக்கேணியில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

தொழிற்கொள்கை பற்றி அங்கும் இங்குமாகச் சில முடிவுகளைச் செய்வது, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருக்க முடியாதென்று அவர் கூறினர்.

மொழிப்பிரச்னை சம்பந்தமாக மாணவர்களைத் தவருன வழியில் தி. மு. க. செலுத்தவேண்டாம் என்று திரு. சுப்பிரமணியம் கேட்டுக்கொண்டார்.

இடதுசாரி கம்யூனிஸ்டுகளால் உள்நாட்டில் அபாயம் ஏற்படலாமென்றும், மற்றும் சீனர்கள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோர்களிடமிருந்தும் அபாயம் ஏற்படக்கூடும் என்றும் திரு. சுப்பிரமணியம் எச்சரிக்கை செய்தார்.

## சிக்கிம் எல்லையில், தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது

### புதிய நடவடிக்கை இல்லை

புதுடில்லி, செப். 16

சிக்கிம் எல்லையிலுள்ள நாதுலா பகுதியில் இப்போது அமைதி நிலவிவருகிறது. துப்பாக்கிப் பிரயோகம் எதுவும் புதிதாக அங்கு நடைபெறவில்லை.

இந்த அமைதி தொடர்ந்து நீடிக்குமா அல்லது இன்னுமொரு சீனத்தாக்குதலுக்கு வழிவகுக்கும் தற்காலிக அமைதியா என்பது பற்றி நிச்சயமாகக் கூறமுடியாது என இந்திய இராணுவப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

### நீடிக்கும் என நம்பிக்கை

ஆனல், சிக்கிமுக்கும் பூட்டானுக்குமான இந்திய அரசியல் அதிகாரி திரு. பாலச்சந்திர மேனன், சிக்கிம் தலைநகரான காங்டாக்கில், பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், சிக்கிம் எல்லையில் நிலவும் அமைதி தொடர்ந்து நீடிக்குமெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கொள்கை நிலையைச் சீனர்கள் விளங்கிக்கொண்டு, நியாயத்தை விரைவில் உணருவார்கள் எனத் தாம் நம்புவதாகவும் அவர் கூறினர்.

## இராணுவ அதிகாரி கைதானர்

ஜக்கார்த்தா, செப். 16

இந்தோனேஷியாவில், உயர்தர இராணுவ அதிகாரிகளில் ஒருவரான பிரிகேடியர் ஜெனரல் சுஹார்ஜோ, கைது செய்யப்பட்டுள்ளார். ஜெனரல் சுகார்டோவின் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## ஹொங்கொங் கலவரங்களில் 37 பேர் கொல்லப்பட்டனர்

### 400 பேர் காயம்

ஹொங்கொங், செப். 16

சில தினங்களாக அமைதி நிலவிய ஹொங்கொங்கில், நேற்று மீண்டும் கலவரங்களும், பலாத்காரச் சம்பவங்களும் நிகழ்ந்தன.

இந்தக் கலவரங்களில், 37 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 6 பேர் பொலிஸ்காரர் என அறிவிக்கப்பட்டுள்ளது. 400 பேருக்கு மேல் காயமடைந்துள்ளதாகவும், 3,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு சம்பவத்தில், கலகக்காரர் மீது பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். 29 பேர் கைது செய்யப்பட்டனர்.

## துண்டுப்பிரசுர விநியோகம் பற்றி டூனிஷியாவுடன் சீன தகராறு

பீகிங், செப். 16

மற்றுமொரு அந்நிய நாட்டுடன் சீன, புதிதாகத் தகராறில் இறங்கியுள்ளது. அந்நாடு டூனிஷியாவாகும்.

டூனிஷியாவிலுள்ள சீனத் தூதரகம் தனது நியாயமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு டூனிஷியாவினல் தடைவிதிக்கப்பட்டுள்ளதை எதிர்த்துச் சீன டூனிஷியாவிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

### துண்டுப்பிரசுர விநியோகம்

டூனிஷியாவிலுள்ள சீனத் தூதரகம், பிரச்சாரத்துண்டுப் பிரசுரமொன்றை அங்கு பரவலாக விநியோகிக்க முயன்றதாகவும், அத்துண்டுப்பிரசுரத்தை விநியோகிக்கக்கூடாதென டூனிஷியா தடைவிதித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

வெளிநாட்டு நிருபர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தபாற்பெட்டிகளில் அத்துண்டுப் பிரசுரத்தைப் போடுவதன் மூலம், சீனத் தூதரக உத்தியோகத்தர்கள் அதை விநியோகம் செய்யமுன்றதாகக் [கூறப்]படுகிறது.

## ரூ. 2 கோடி பெறுமதியான கள்ளக்கடத்தல் தங்கம்

### பாலம் விமான நிலையத்தில் நிறுத்தப்பட்ட பி.ஓ.ஏ.ஸி. விமானம்

புதுடில்லி, செப்டம்பர் 16

பாலம் விமான நிலையத்தில், 2 கோடி ரூபாய் பெறுமதியான கள்ளக்கடத்தல் தங்கத்தைக் கொண்ட பி. ஓ. ஏ. ஸி. விமானம் ஒன்று சுங்க அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தங்கம் 1200 கிலோகிராம் எடையுள்ளது. இதன் மதிப்பு 1 கோடியே 95 லட்சம் ரூபாயாகும்.

தங்கம் கைப்பற்றப்பட்ட செய்தியைப் புதுடில்லி சுங்க அதிகாரிகள், சர்வதேச கள்ளக்கடத்தல் துப்புத்துலக்கும் ஸ்தாபனமாகிய 'இன்டெர் போல்'லுக்கும், மற்றும் சர்வதேச பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளனர்.

### ஹொங்கொங் போகவேண்டியது

புதுடில்லியிலிருந்து கல்கத்தா நோக்கிச் சென்ற இவ்விமானம், வழியில் என்ஜின் கோளாறு காரணமாக மீண்டும் டில்லிக்குத் திரும்பியது. அப்போது, பாலம் விமான நிலையத்தில், அது சோதிக்கப்பட்டபோது, கள்ளக்கடத்தல் தங்கம் பிடிபட்டது.

இவ்விமானம், ஹொங்கொங் போகவேண்டிய விமானமாகும். ஆகவே இக்கள்ளக்கடத்தல் தங்கம் சீனவுக்குக்கொண்டு செல்லப்படவிருந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

## ஒரிஸ்ஸாவுக்கு ரூ. 50,000

புதுடில்லி, செப். 16

ஒரிஸ்ஸா வெள்ள நிவாரணத்துக்கென, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. 50,000 த்தை ஒரிஸ்ஸா முதல் மந்திரியிடம் அனுப்பி வைத்துள்ளார்.

## கர்நாடக இசைக்குழு அமெரிக்கா பயணம்

சென்னை, செப். 16

பிரபல இசை வித்துவான் இராமநாதபுரம் கிருஷ்ணன், மிருதங்க வித்வான் திரு. டி. ரங்கநாதன், வயலின் வித்துவான் திரு. வி. தியாகராஜன் கஞ்சிரா வித்வான் திரு. வி. நாகராஜன் ஆகியோர் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

கலாச்சார பரிமாற்ற இட்டத்தின் கீழ், வெஸ்லேயன் பல்கலைக்கழக அழைப்பின் பேரில்செல்லும்இக்கோஷ்டி அமெரிக்காவில் பத்து மாத காலம் தங்கியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறை

# புதிய தபால்நிலைய கட்டடவேலை இம்மாதம் ஆரம்பமாகும்

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறையில் இரண்டரை லட்சம் ரூபாசெலவில் நவீன தபால் நிலையம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இப்புதிய தபால்நிலையத்திற்கான கட்டடம் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் அமைக்கப்படும். இக் கட்டிடத்திற்காகத் தபால் இலாகா ஏழரைப் பரப்பு நிலத்தை வாங்கியிருக்கிறது.

காங்கேசன்துறையில் நிறுவப்படவிருக்கும் தபால்நிலையம் கல்கிசை தபால் நிலையத்தைப்போல் அமையும். இதற்கான படம் வரையப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாழ்ப்பாணப்பகுதிப் பிரதம பொறியியலாளர் தபால்நிலையம் அமைக்கப்படும் இடத்தைப் பார்வையிட்டுச் சென்றுள்ளதாகவும் கல்கிசை தபால் நிலையத்தைப் போல கட்டுவதானால் தற்போது எடுக்கப்பட்டிருக்கும் நிலம் போதாதிருப்பதால் அருகிலுள்ள காணியில் மேலும் 2 1/2 பரப்பு நிலத்தை வாங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும், மேலதிகமாகத் தேவைப்படும் நிலத்தைக் கொடுக்க உரிமையாளர்கள் முன்வந்துள்ளதாகவும் அறியப்படுகிறது. இதற்கான முயற்சிகளில் காங்கேசன்துறைப் பொதுமக்களும், காங்கேசன்துறை தபால்நிலைய அதிபர் திரு. சிவஞானமும் ஈடுபட்டுழைத்தனர்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த போஸ்மாஸ்டர் ஜெனரல், தபால் மராமத்து மந்திரி மொண்டேகு ஜெயவிக்ரமா ஆகியோர் காங்கேசன்துறைத் தபால் நிலையத்தைப் பார்வையிட்டு புதிய தபால்நிலையம் அமைத்துத் தருவதாக உறுதியளித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை தபாற்கந்தோருக்கு இரண்டரை லட்சம் ரூபா முன்பே அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இம்மாதத்திற்குள் இதற்கான அத்திபாரக்கல் நாட்டப்படவிருக்கிறது.

## "இராம முன்னேற்றமே அபிவிருத்தித்திட்டத்தின் முதல்படி"

— திரு. பிரேமதாசா

உடுப்பிட்டி, சனி

நீர், மின்சார விநியோகமே ஒரு நாட்டை முன்னேற்றுமென்றும், இதனையே பிரதமரும் விரும்புவதாகவும், பின்தங்கிய கிராமங்களுக்கு உதவியளிப்பதையே பிரதமமந்திரி முக்கியமாகக் கவனிப்பதாயும் உள்ளூராட்சி உதவி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா கரவெட்டி அத்துளு நீர் விநியோகத்திட்ட அடிக்கல் நாட்டுவிழாவில் குறிப்பிட்டார். சிறிதுநேரம் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் உதவி அமைச்சர் பேசினார். தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:

"முன்னேற்றமடைந்த நகரங்களை மேலும் முன்னேற்றுவதினால் பயனில்லை. இதனால் மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு இடம்பெயர நேரிடும். கிராமமுன்னேற்றமே அபிவிருத்தித்திட்டத்தின் முதல் படியாகும்.

"இலங்கை மிகவும் பின்தங்கிய நாடு. உணவு, உடைகளுக்காக நாம் வெளிநாடுகளுக்கு அதிக பணம் செலவழிக்கிறோம். இதனால் கோடிக்கணக்கான பணம் வீணாகிறது. எமது நாட்டிலே உடை, உணவு, பாலுணவு முதலியவற்றை உற்பத்திசெய்வதன் மூலமும் அவற்றை ஆதரிப்பதன் மூலமும் பல லட்சம் ரூபாவை மிச்சப்படுத்தலாம். இப்பணத்தைக்கொண்டு வேலையில்லாப் பிரச்சினையைப் போக்கலாம். எமது நாடு முன்னேற இந் நாட்டின் சகல சமூக மக்களும் ஒத்துழைக்கவேண்டும். இலங்கையில் தேசிய ஐக்கியம் ஏற்பட்டுவிட்டதை எமது எதிரிகளே ஒத்துக்கொண்டார்கள்.

## பௌர்ணமி கலைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகரசபை மாதந்தோறும் அளித்துவரும் பௌர்ணமி நாள் கலைநிகழ்ச்சிகள் இம்மாதம் 18-ம் திகதி நடைபெறவிருக்கின்றன. யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் நடைபெறும் இவ் விழாவில் சுண்டுக்குளி யாழ். நாடகக் கலாமன்றத்தின் "அடங்காப்பிடாரி" என்னும் நாடகம் இடம்பெறும். [ந. நி]

## தமிழ்காங்கிரஸ் வாலிப முன்னணி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகிலஇலங்கை தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணியின் யாழ்ப்பாணக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெறுமென்றும், இன்றைய அரசியலில் முக்கிய விஷயங்கள் பற்றி ஆராயவிருக்கும் இக் கூட்டத்திற்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமை வகிப்பாரெனவும் அறிவிக்கப்படுகிறது. [வி. நி]

## வைத்தியர் சங்கம் அனுதாபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

38 வருடமாக வைத்தியத் துறையில் பணியாற்றிய வைத்தியபூபதி திரு. ஏ. சி. இராசையாவின் மறைவு தமிழ்பேசும் வைத்திய உலகுக்கு பெரும் இழப்பென்றும், தமது வாழ்நாளில் தமிழ்பேசும் வைத்தியர்களை ஒன்றுசேர்க்க அவர் அரும்பாடுபட்டாரெனவும், வைத்தியர்கள் தொழிலாற்றும்போது ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்த அவர் பெரிதும் உதவினார் என்றும் அகில இலங்கை சித்த ஆயுர்வேத வைத்திய சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசிய திரு. ஏ. கே. குமாரசாமி தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அன்னாரின் சேவைகளை நினைவுகூர்ந்தும் அவரது மறைவினால் ஏற்பட்டுள்ள நஷ்டம்பற்றியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, நிர்வாகசபை காலஞ்சென்ற வைத்திய பூபதி திரு. ஏ. சி. இராசையாவின் குடும்பத்தினருக்கு அனுப்பிவைத்தது. (நி)

## தண்ணீர் தட்டுப்பாடு

தருமபுரம், சனி

தருமபுரம் அரசினர் மருந்தகத்துக்குத் தண்ணீரில்லாததால் வைத்திய சேவை பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேபோல் பாடசாலைகளிலும் மாணவர்களுக்குத் தண்ணீர்வசதியில்லாததால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரிதும் சஷ்டப்படுகின்றனர்.

எம். ஜி. ஆர். — ராதா வழக்கு

# ஆஸ்பத்திரியில் எம்.ஜி.ஆர். இருந்தபோது நாளொன்றுக்கு ரூ. 100 தரப்பட்டது

### குடும்ப டாக்டர் சுப்பிரமணியம் சாட்சியம்

சென்னை, செப் 16

எம். ஜி. ஆர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பொழுது தாம் அவரது உடல்நிலை பற்றிக்கவனித்துக் கொண்டிருந்ததாகவும், நாளொன்றுக்கு தமக்கு ரூ 100 சம்பளமாகத் தரப்பட்டதாக எம். ஜி. ஆர்.-எம். ஆர். ராதா வழக்கு நேற்று சென்னை செஷன்ஷ் நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த எம். ஜி. ஆரின் குடும்ப வைத்தியரான டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம் தெரிவித்தார். கீழ் கோர்ட்டில் இவ்வாறு எம். ஜி. ஆரின் உடல் நிலையைக் கவனித்துக் கொண்டிருந்ததற்காகத் தினம் ரூ 110-50 சதம் தமக்கு எம். ஜி. ஆரால் தரப்பட்டதாகவும் டாக்டர் சுப்பிரமணியம் கூறினார்.

ராதா தரப்பு வழக்கறிஞரான திரு. என். ரி. வானமாமலையால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதே டாக்டர் சுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் சுப்பிரமணியம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது;-

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது பற்றி எனக்கு எம்.ஜி ஆரின் வீட்டுக் காவலாளர் போன் மூலம் தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து சம்பவம் நடந்த தினமான ஜனவரி 12-ந்திகதி மாலை 6. 40 மணியளவில் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். ஆஸ்பத்திரிக்கு நான் சென்று எம். ஜி. ஆரைப் பார்ப்பதற்கு முன் அவர் இறந்து விடுவாரோ என்ற ஒருவித அச்சம் எனக்கு ஆஸ்பத்திரிக்குச் சென்றுகொண்டிருந்த போது ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நான் ஆஸ்பத்திரிக்கு 6. 40 மணியளவில் சென்றபோதும் இரவு 8. 45க்குப் பின்னரே அவரைப் பார்க்க முடிந்தது. நான் அவரைப் பார்வையிட்டபின் அவரது உடல்நிலை பற்றி பத்திரிகை நிருபருக்கு அறிவித்துக் கொண்டிருந்தேன். இவை பின்னர் தமிழ் அங்கிலப் பத்திரிகைகளில் வெளியாகின.

நான் சொன்னவற்றுக்கு மாறாகவும் பத்திரிகையில் செய்திகள் வெளியாகின. ஆனால் நான் அவற்றுக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. 'குமுதம்' என்ற சஞ்சிகையில் எனது பெயரில் வெளியான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றிய கட்டுரை பிழையானது. நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றநேரம் இதில் தவறாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம். ஜீ. ஆரின் இரத்தக் கறை படிந்த ஷேர்ட்டைக் கழுவுவதற்குத் தாமே காரணம் எனத் தெரிவிக்கப்பட்ட வாதத்தை டாக்டர் சுப்பிரமணியம் மறுத்தார்.

## இ. தோற்சவம்

நீர்வேலி, சனி

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் இரதோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 1-30 மணியளவில் நடைபெறும் இத். தேர் இலங்கை இந்திய சிற்ப வல்லுனர்களால் சித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. இசை நிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அனலைதீவு வாலிபர் இயக்க இரண்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் கொழும்பு நில் வீதி அரசினர் தமிழ் ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

வாலிபர் இயக்கத்தின் இரண்டாவது ஆண்டு அறிக்கையில் உள்ளூர் பாடசாலை வெற்றிடங்கள் நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைபற்றியும், நயினாதீவில் நியமித்ததுபோல அனலைதீவு கிராமத்திற்கும் பூரண தகைமை பெற்ற வைத்தியரொருவர் நியமிக்கவேண்டிய அத்தியாவசியம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரயிலில் களவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வந்துகொண்டிருந்த 'மெயில் புகைவண்டியில் ரூபா 1000 ரொக்கம் திருட்டொன்று நடைபெற்றது. இதுசம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இச் சம்பவம் நேற்றுக் காலை நடைபெற்றது.

நேற்றிரவு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த புகையிரதத்தில் மாங்குளத்துக்கு அருகாமையில் ஒரு திருட்டு நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. [ந. நி]

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 17-9-67

[செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை-எஸ் கருணலயபாண்டியர், 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை—சங்கைக்குரிய பிதா ஜி. ஜி. இரத்தினராசா, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக் குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-30 நேயர் விருப்பங்கள், 6-45 கிறிஸ்தவ ஆராதனை, 7-15 பாட்டு—என். பி. பாலச்சந்திரன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, [illegible] 10-00 மாதர் தேட்டவை.

# வடபகுதி விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் சோதனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

விதைநெல் விதைக்கப்பட்டு முளைகிளம்பியிருக்கும் நேரத்தில் இன்னும் மழை வராத காரணத்தினால் வடபகுதியில் நெல் விதைத்திருக்கும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இப்பொழுதுவடபகுதியில் பல இடங்களிலும் நெல் விதைக்கப்பட்டுவிட்டதென்றும் குறிப்பாகச் சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் கூடிய விளைச்சலைக்கொடுத்த அரியாலையில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் நெல் விதைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரியவருகிறது.

மழை இன்னும் பெய்யாத காரணத்தினால் யாழ்ப்பாணத்தில் குளங்கள் வற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. [வி. நி.]

அறிவித்தல்

BAYER

பொலிடோல்

மெற்றசிஸ்டொக்ஸ்
லெபேசிட்
மட்டாசில்
பொலித்தியோன்
அன்றக்கோல்
குப்ருவிற்
டக்தல்

தற்பொழுது பெற்றுக்கொள்ள கூடிய இடங்கள்

"புரேவின்ஷல் டிஸ்றிபியூட்டாஸ்"
ஒட்டோஸ் கட்டிடம்
யாழ்ப்பாணம்.

★

வ. வி. உ. கூ. சமாசம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு




மலிவு விலையில் கட்டிடக்காணி துண்டுகள் விற்பனைக்கு இருக்கின்றன

யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவிலுக்குச் சமீபத்தில், பஸ் போக்குவரத்துப் பிரதான வீதிகள் இரண்டின் மத்தியிலுள்ள அம்மன் வீதியில் கட்டிடக் காணித் துண்டுகள் சில உடனடியாக விற்பனைக்கு உண்டு. தவணைமுறையில் பணம் கட்டுவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு

H. P. T.,
6, கெய்ஸர் வீதி,
கொழும்பு.
அல்லது
த. வடிவநாதன்
'பூகன்ஸ்'
71, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.

247


## பொன்னாலை கடல் விவசாய பூமியாகும்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொன்னாலைக் கடலைச் சேர்ந்த ஒரு பகுதியை நன்னீர்த் திடலாக ஆக்கி கமத்தொழில் அபிவிருத்திக்கு ஊக்கங்கொடுக்குந் திட்டமொன்றை வடமாவட்ட அதிபர் வகுத்துள்ளதாக அறியப்படுகிறது.

இதுபற்றிய பூர்வாங்க நடவடிக்கையை மேற்கொள்ள அண்மையில் சில அதிகாரிகள் குறிப்பிட்ட இடத்தைப் பார்வையிட்டுள்ளார்கள். [நி]

## வெற்றிதோல்வி இல்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

காரைநகர் கடற்படைக் கரபந்தாட்டக் குழுவுக்கும் தோப்புக்காடு கரபந்தாட்டக் குழுவினர்க்கும் நேற்று முன்தினம் காரைநகர் கடற்படை விளையாட்டுத்தளத்தில் நடைபெற்ற சிநேக பூர்வ விளையாட்டுப்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. [நி]

காங்கேசன்துறை, சனி

வருடா வருடம் நடைபெற்றுவரும் பொன்னம்பலம் ஞாபகார்த்த வெள்ளிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் 5-ம் திகதி ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகிறது. கட்டுவன் ஞானோதய விளையாட்டுக் கழகம் நடத்தும் இப்போட்டிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள பல விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவிருக்கின்றன.

## யூனியன் கல்லூரி

காங்கேசன்துறை, சனி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கட்டிடத்துக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபாவைக்கொண்டு நான்கு வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அண்மையில் நடந்த சூறாவளியால் இவ் வகுப்பறைகள் நான்கும் சேதமுற்றது குறிப்பிடத்தக்கது.


3-வது வெற்றி வாரம்!

| | | |
|---|---|---|
| கெபிடல் | பிளாஸா | விஜயா |
| [கொட்டாஞ்சேனை] | [வெள்ளவத்தை] | [மட்டுநகர்] |
| விஜிதா | மொடர்ன் | ஸ்ரீகிருஷ்ணா |
| [ஹட்டன்] | [பதுளை] | [திருமலை] |

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!

ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ், விஜயலட்சுமி, ரத்னா, மாதவி
நடித்த



நாம் மூவர்

டைரக்ஷன்: ஜம்பு | பாடல்கள்: வாலி | இசை: என்.எம்.எஸ்.

கடைசி சிலதினங்கள் கிங்ஸ்லி [கொழும்பு]

மற்றும் 5 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
அ... பே ...


கிரிக்கெட் போட்டி

## டாக்டர்கள் - வழக்கறிஞர்கள் நாளை மோதுவார்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வழக்கறிஞர்கள் விளையாட்டுக் கோஷ்டிக்கும், டாக்டர்கள் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி நாளை நடைபெறும். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டியில் கலந்துகொள்பவர்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:

வழக்கறிஞர்கள் கோஷ்டி: மாவட்ட நீதிபதி திரு. டபிள்யு. விஜயசேகரா (கப்டன்), மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் (உதவிக் கப்டன்), திரு. ஜே. ஐ. ராஜரத்தினம், திரு. அல்பிரட் துரையப்பா, திரு. என். இராசநாயகம், திரு. எஸ். நாகராஜா, திரு. எஸ். அம்பலவாணர், திரு. ரி. சிவலிங்கம், திரு. எஸ். ஸ்ரீதரன், திரு. ஏ. சேனாதிராஜா, திரு. வி. பாலசிங்கம், திரு. இ. கோபாலசிங்கம், திரு. எஸ். ஞானச்சந்திரன்.

டாக்டர்கள் கோஷ்டி: திரு. கே. துரைசிங்கம் [கப்டன்], திரு. டபிள்யு. இராசையா, திரு. எஸ். ஆனந்தராஜா, திரு. ஆர். திருநாவுக்கரசு, திரு. பதிமானந்தா, திரு. கே. முருகுப்பிள்ளை, திரு. வி. சண்முகநாதன், திரு. கே. ஸ்ரீபஞ்சலிங்கம், திரு. டபிள்யு. நல்லையா, திரு. எஸ். துரைசிங்கம், திரு. விவேகானந்தன், திரு. எஸ். விக்னராஜா, திரு. எஸ். தெய்வேந்திரா. [ந. நி.]

## யாழ். மாவட்ட கல்லூரிகளின் விளையாட்டுப் போட்டி 24-ம் திகதி ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவிலான யாழ். மாவட்டக் கல்லூரிகளுக்கிடையேயான 1-ம பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 24-ம் திகதி மாலை 4-30 மணியளவில் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

'ஏ' பிரிவு 'பி' பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெறவிருக்கும் இச் சுற்றுப்போட்டியில் 'பி' பிரிவு 'பி' ஒன்று 'பி' இரண்டு என இரு கோஷ்டிகளாகப் பிரிந்து ஒன்றை ஒன்று மோதும்.

'ஏ' பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியனவும், 'பி' பிரிவு 'பி' முதலாம்கோஷ்டியில் வல்வெட்டித்துறை மத்தியமகாவித்தியாலயம், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தியன் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகியனவும், 'பி' பிரிவு இரண்டாம் கோஷ்டியில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியும், யாழ்ப்பாணம் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகளும் கலந்துகொள்கின்றன.

இம்மாதம் 2-ம் திகதியிலிருந்து தினமும் இரண்டு போட்டிகளாக அக்டோபர் மாதம் 17-ம் திகதி வரையும் மொத்தம் 44 உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிகளுக்குரிய மத்தியஸ்தர்களை யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச்சங்கம் நியமிக்கும். இச் சுற்றுப் போட்டிக்குரிய நடவடிக்கைகளை மேற்படி சங்கக் காரியதரிசி திரு. வி. ரி. கணேசலிங்கம் மேற்கொண்டுள்ளார். [வி. நி.]

## குற்றத்தை ஒப்புக்கொண்டார் தீர்ப்பு 20-ம் திகதி

காங்கேசன்துறை, சனி

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இராசநாயகம் சிவக்கொழுந்து என்பவரின் 350 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை சுன்னாகம் பஸ் நிலையத்தில் பட்டப்பகலில் அறுத்துக் களவாடியதாக குருநாகலைச் சேர்ந்த எம். கயிலையாண்டிவேல், முனுசாமி நல்லம்மா ஆகியோர் மீது சுன்னாகம் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது முதலாம் எதிரி எம். கயிலை ஆண்டிவேல் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் இரண்டாம் எதிரி விடுதலை செய்யப்பட்டார். நீதிபதி தீர்ப்பை இம்மாதம் 20-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு, சிவ. ஸ்ரீதரன் ஆஜரானார்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
காந்தராவ் — வசந்தி
நடித்த
வீரபாண்டியன்

நியூ காலிங்கஸ்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
K.R. ராமசாமி - பத்மினி
நடித்த
சொர்க்கவாசல்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 6-30 9-45
போயா தினங்களில் 3 காட்சி
சும்ருன் - கிருஷ்ணகுமாரி
நடித்த
ஸ்டேட் எக்ஸ்பிறெஸ்
[ஹிந்தி]

REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m.
9-45 p. m.
Ann Margret
Tony Franciosa
in
THE PLEASURE SEEKERS


## விவசாயக் கடன்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு இன்னும் சில தினங்களில் கடனுதவி வழங்கப்படும் என அறியப்படுகிறது. இதற்கான நடவடிக்கைகளில் ப.நோ. கூட்டுறவு சங்கங்களும் உத்தியோகஸ்தர்களும் முனைந்துள்ளனர்.

## வரி விளம்பரம்


### தேவை

யாழ். நகரில் பிரபலமான ஸ்ருடியோ ஒன்றுக்கு அனுபவமுள்ள மனேஜர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் 25-9-67 க்கு முன் விளம்பர இல. 2362 மே./பா. ஈழநாடு யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2362

ஆசிரியைகள்:

கலைவிஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியைகள் பாலராஜேஸ்வாசா 1-ம் கட்டை பருத்தித்துறையில் மாணவிகளுக்கு பின்னேர வகுப்புகள் நடாத்த தேவை. 30-9-67-க்கு முன் விண்ணப்பிக்கவும். காரியதரிசி, வடமராட்சி மாதர் கலா மன்றம், No. 66, தம்பசெட்டி ரோட்டு, பருத்தித்துறை. 2367

### கல்வி

வகுப்புகள்:-

G. C. E. [சாதாரணம்] டிசம்பர் 1967, ஆங்கிலம், ரசாயனம், பௌதிகம், தூய கணிதம் ஆகிய பாடங்களில் வகுப்புகள் B.Sc பட்டதாரி ஆசிரியையாலும், கலைப் பாடங்களில் வகுப்புகள் B.A. பண்டிதர் பட்டதாரிகளாலும் நடத்தப்படும். விபரங்களுக்கு — நிர்வாகி, கணேசன் கல்வி நிலையம், 15, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 2364

வகுப்புகள்:

பொருளாதாரம், கணக்கியல், கணக்குப் பரிசோதனை, புள்ளி விபரம், வர்த்தகச் சட்டம், வியாபாரம், வங்கியும் அதன் சட்டமும், கூட்டுறவு, வர்த்தகம் ஆகிய பாடங்களில் வகுப்புகள் நடாத்தப்படும். B. Com. பட்டதாரிகளால் நடாத்தப்படும் இவ் வகுப்புகள் எமது நிலையங்களெல்லாவற்றிலும் நடைபெறும். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்:- நிர்வாகி, கணேசன் கல்வி நிலயம், அளவெட்டி. கிளைகள்: 15, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்— "ராஜஸ்தான்", மூளாய் வீதி, மூளாய், சுளிபுரம். 2365


## கூட்டுஸ்தாபனம் மீன்களை வாங்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மீன்பிடியாளர்களிடமிருந்துபிடிக்கபடும்சகலமீன்களையும் தாங்களேவிலைக்கு வாங்கும் புதியதிட்டமொன்றைவடபகுதி கடற்றொழில் கூட்டு ஸ்தாபனம இப்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் மீனவர்கள் அதிக லாபமடைவதாகத் தெரிகிறது.

இதுவரை காலமும் பிடிக்கப்படும் மீன்களை மீனவர்கள் ஐஸ் போட்டு தனிப்பட்ட வியாபாரிகளுக்கே விற்பனை செய்து வந்தார்கள். ஆனால் மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் மீன்களை ஐஸ் போடாமல் முன்னரிலும் பார்க்க கூடுதலான விலைக்கு மீனவர்களிடமிருந்து பெற்று 'ஐஸ்' போட்டு விற்பனை செய்கின்றது.

இப்புதிய முறை கடந்த மாதம் 29-ம் திகதியிலிருந்து பருத்தித்துறையில் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால் போதிய வருவாய் மீன்பிடிக் கூட்டுஸ்தாபனத்துக்குக் கிடைக்குமானால், இத்திட்டம் மயிலிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமென தெரிகிறது. [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று மணி தாமதம் மூன்று வித காரணம்

யாழ்ப்பாணம், சனி

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த கொழும்பு 'மெயில்' ரயில் வண்டிக்கு மூன்று 'தத்து'கள் ஏற்பட்டன.

முதலில் பொல்காவலைக்கு அண்மையில் ரயிலுக்குள் குஸ்தி போடத் தொடங்கினர்களாம்.

இதனால் அரை மணி நேரம் தாமதம்.

இரண்டாவதாக மாங்குளத்தில் ஒரு பிரயாணியிடம் 1000 ரூபாய் அபேஸ் பண்ணப்பட்டது.

இதனால் ஒரு மணி நேரம் தாமதம்.

மூன்றாவதாக எழுதுமட்டுவாளில் தண்டவாளத்துக்கு மேல் லொறி ஒன்று புரண்டு கிடந்தது.

இதனால் ஒரு மணி நேரம் தாமதம். [நநி]

# அரசாங்க அதிபர்கள் முயற்சியில் பிரதமர் திருப்தி

கொழும்பு, வெள்ளி

உணவு உற்பத்தி விஷயத்தில் அரசாங்க அதிபர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அதனால் கிடைத்துள்ள பலன்கள் குறித்தும் தாம் பெரிதும் திருப்தி யடைந்திருப்பதாக பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா இன்று கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் கூறினர்.

உலக அரங்கில் உணவு நிலைமை மோசமாகக் கூடும் என்றும் அதனால் உள்நாட்டில் உணவு உற்பத்தியை மேலும் அதிகரிக்கவேண்டும் என்று பிரதமர் கூறினர். இந்த ஆண்டைவிட 1968-ல் உணவு உற்பத்தி குறியளவு 15 விதம் அதிகரிக்கப்படவேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மகாநாட்டில் 22 அரசாங்க அதிபர்களும், உணவு அமைச்சர் எம். டி' பண்டா கஉணி அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## அழகிரிசாமி விஜயபாரதி

### யாழ்ப்பாணம் வருவர்

யாழ்ப்பாணம், சனி

தென்னகத்திலிருந்து ஈழம் வந்துள்ள எழுத்தாளர் திரு கு. அழகிரிசாமி, பாரதியாரின் பேத்தி திருமதி விஜயபாரதி, அவரது கணவர் திரு. சுந்தரராஜன் ஆகியோர் வடபகுதிக்கு எதிர் வரும் 23ந் தேதி வருவார்களென அறியப்படுகிறது.

இம் மாதம் 23ந் தேதி பருத்தித்துறையில் நடைபெறும் கூட்டத்திலும் 24ந் தேதி மாலை காங்கேசன் துறையில் நடைபெறும் கூட்டத்திலும் அவர்கள் கலந்துகொள்வார்கள். யாழ்ப்பாணத்தில் யாழ். இலக்கிய வட்டம் ஒழுங்கு செய்யும் கூட்டத்தில் 24ந் தேதி இவர்கள் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிகிறது. (நி]

## 5 பேர் தமிழர்

கொழும்பு, வியாழன்

1965-1966ம் ஆண்டு அரசாங்கசேவைகளின் நிர்வாக வெளிநாட்டுச் சேவைகளுக்கென நடத்திய பகிரங்கப் பரீட்சையில் 75பேர் தெரிவு செய்யப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் 5 பேர் மட்டுமே தமிழர். இந்த ஐவரிலும் இருவர் பெண்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு:

திரு. வி. நல்லநாயகம், திரு. என். ஆனந்தசேகரம், திரு. என். பத்மநாதன், செல்வி ஜி. கந்தசாமி, செல்வி கே. பொன்னம்பலம்.

1966ல்நடைபெற்ற வெளிநாட்டுச்சேவைக்கான பரீட்சையில் திரு. வி. அருளானந்தம் சித்தியடைந்துள்ளார்.

## சிறுவனை அடித்தவர்

### எச்சரித்து விடுதலை

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த செல்லத்துரை கணேசமூர்த்தி என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த துரைராஜாவின் மகன் பிரேம்குமார் [வயது 9] என்னும் சிறுவனைக் கடந்த சித்திரை மாதம் 29-ம் திகதி பாடசாலையிலிருந்து வீடு சென்றுகொண்டிருந்த சமயம் கைகளால் அடித்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது இருசாராரும் சமாதானமாகச் செல்லப் போவதாகக் கூறவே மாஜிஸ்திரேட் எதிரியை எச்சரித்து அநாதை விடுதிக்காக 10 ரூபா செலுத்தும்படி உத்தரவிட்டார்.

## டெலிபோன் கம்பி திருட்டு

சங்கானை, சனி

யாழ்ப்பாணம்- பொன்னாலை வீதியில் திரும்பவும் டெலிபோன் கம்பித்திருட்டு ஆரம்பமாகி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இனம் தெரியாத விஷமிகள் திட்டமிட்டு நடாத்தும் இத்திருட்டைக் கண்டு பிடிப்பதில் சங்கானை பொலிசார் திவிர முயற்சி எடுத்துள்ளனர். 200 யாருக்கும் அதிகமான கம்பி களவாடப் பட்டுள்ளதெனப் பொலிசாரின் விசாரணையிலிருந்து தெரிய வருகிறது.

## எதிரிகள் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முதலாம் எதிரி சார்பில் கே. வி. எஸ். சண்முகநாதன் புரக்டர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். இரண்டாம் எதிரி சார்பில் அட்வகேட் எஸ். நாகராஜா புரக்டர் எஸ். தில்லையரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புரக்டர் கே. குணரத்தினம் ஏற்படுத்தப் பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை மீண்டும் இம்மாதம் 19-ம் திகதி காலை ஆரம்பமாகும்.

## ஐயாறன்

[2 ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தியத் தேர்தலில் இருமுறை தோல்வி அடைந்தும் மேனன் அவர்கள் அரசியலில் உற்சாகமிழந்ததாகத் தெரியவில்லை. இந்திய அரசாங்கத்தை மறைமுகமாகவும் தாக்கவில்லை. இதற்கு மாறாக, இந்தியாவின் கூட்டு சேராக்கொள்கையை ஆதரித்துப் பேசினர்.

அடுத்தவாரம் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி வருவதற்குமுன் மேனன் விஜயம் செய்ததில் ஏதும் ரகசியம் உண்டா என்று விசாரித்ததில், அப்படி எதுவுமில்லை என்றும் சில மாதங்களுக்குமுன் டெல்லி ரோவிலே, ஜனநாயக காங்கிரஸ் தலைவரான ஏ. அஸிஸ் அவர்களுக்கு ''ஒரு பலவீனமான நேரத்தில்'' கொடுத்துவிட்ட உறுதிமொழிக்கிணங்கவே தாம் இலங்கைக்கு இச்சமயம் வரவேண்டி ஏற்பட்டதாகவும், இந்தியாவிலே தமக்கு அதிக வேலையிருப்பதாகவும் அவர் சொன்னதாக அறிந்தேன். எப்படியும் அவரை இங்கு வரச்செய்ததற்காக அவருக்கு மட்டுமன்றி அஸிஸ் அவர்களுக்கும் நாம் நன்றி செலுத்தவேண்டும்.

ஃ ஃ ஃ

இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி இலங்கைக்கு வருவாரா என்று ஓரன்பர் கேட்டதும் திடுக்குற்றேன். ஏன் இந்த சந்தேகம் என்று திருப்பிக் கேட்டதில் வடக்கே சிக்கிம் எல்லையில் ஏற்பட்டுள்ள சண்டைநிலையை ஞாபகமூட்டினர்.

சென்ற முறை நேருஜி அவர்கள் இங்கு வந்தபின் இந்திய-சீன எல்லைச் சண்டையை இலங்கைதலையிட்டு நிறுத்தமுடிந்தது. ஆனால் இப்போதோ, நமக்கும் சீனத்துக்குமே உறவு சரியில்லையே! ஆசிய ஒற்றுமையைப்பற்றி பேசுவதில் இப்போது என்ன அர்த்தம்!

ஃ ஃ ஃ

உடையவனேனைக் கருணையினால் கலந்தாண்டு கொண்ட, விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல் வேங்கையின் தோல், உடையனே மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே, சடையவனே தளர்ந்தேனெம்பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

—மாணிக்கவாசகர்.

## பாரதி விழா

கொத்மலை, சனி

தலவாகெல்லை இந்துஇளைஞர் மன்றத்தினர் இம் மாதம் 20-ம்திகதி பாரதி விழா நடத்த ஏற்பாடு செய்து வருகின்றனர். இவ்விழாவில் பாரதியின் பேத்தி திருமதி விஜயபாரதி அவரது கணவர் திரு. சுந்தரராஜன் திரு. கு. அழகிரிசாமி ஆகியோரும் கலந்து கொள்வர்.

## முல்லைத்தீவில் கடும் வரட்சி

### மக்கள் அச்சம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவுப் பகுதியில் தற்போது நிலவி வரும் கடும் வரட்சி காரணமாகக் குடிதண்ணீரின்றிமக்கள் கஷ்டமடைகின்றனர். கிணறுகள் யாவும் வற்றிக் கொண்டு போகின்றன. சில கிணறுகள் முற்றாக வற்றி விட்டன. சலவைத் தொழிலாளரின் பாவனைக்கிருந்த குளமும் முற்றாக வற்றி விட்டது. கால் நடைகள் மறுபுறம் கஷ்டப்படுகின்றன. கால்நோய், கண் நோய், வயிற்றோட்டம் முதலிய நோய்களால் கால் நடைகள் பாதிக்கப்படுகின்றன. இன்னும் ஒரு [illegible] வாவிடில் நிலைமை மேலும் மோசமடையலாம் என மக்கள் அஞ்சுகின்றனர்.

# வரட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனையிறவு தட்டுவன் கொட்டி என்னும்கிராமத்திலுள்ளசமார் 500குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் சமூக சேவைப் பகுதியினரால் குடிநீர் வழங்கப்படுகிறது.

இப்பகுதி மக்களின் குடிநீர்க் கஷ்டம் பற்றி வட பகுதி சமூக சேவைப் பகுதி அதிபர் திரு. என். சிவசிதம்பரத்துடன் கிளிநொச்சி எம். பி. தொடர்புகொண்டு நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாகவே ஒரு குடும்பத்துக்கு 5 கலன் வீதம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் சென்ற 12-ம் திகதியிலிருந்து மோட்டார் வண்டிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. வடபகுதியில் மழையில்லாமையால் ஏற்பட்ட வறட்சி காரணமாக நிலவிவரும் குடிநீர் தட்டுப்பாட்டைத் தொடர்ந்த யாழ்ப்பாணம் சமூக சேவைப் பகுதியினர் புங்குடுதீவு கிழக்கு, மேற்குப் பகுதிகள் எழுவைதீவு ஆகிய இடங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்துவருகின்றனர்.

வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்க் கஷ்டத்தினால் அதிகமாகப்பாதிக்கப் பட்டுள்ளவர்கள் தீவுப்பகுதி மக்களே என அறிவிக்கப்பட்டுள்ளது. [வி. நி.

## 27-ம் திகதி இறுதி தேர்வு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் காணி விஸ்தரிப்பு மேற்பார்வையாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான இறுதித் தேர்வு இம்மாதம் 27-ம்திகதி நடைபெறவிருக்கின்றது. இம்மாதம் முதல் வாரத்தில் நடைபெற்ற முதல் தேர்வில் இங்கு 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இறுதித் தேர்வில் இதில் 2 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இறுதித் தேர்வு இம்மாதம் 0.ம் திகதிநடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. [ந. நி]

## பொலிஸ் நிலையத்தில் வாகனம்இல்லை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் அவசரமான முறைப்பாடுகளை உடனுக்குடன் கவனிக்க முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் அப்படி உடனுக்குடன் விசாரணை செய்ய வேணுமெனக் கண்டால் முறைப்பாடுகாரரே வாடகைக்கார் கொண்டு பொலிஸ் நிலையத்திற்குச் செல்ல வேண்டிய நிலைஏற்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் வாகன வசதியில்லாததே இதற்குக் காரணம். இங்கிருந்து ஒரேஒருஜீப் வண்டி கடந்த ஒரு மாதமாகப் பழுதடைந்து கிடக்கிறது.

## கல்வி இலாகாவின் சுற்றறிக்கை

புன்னாலைக்கட்டுவன், சனி

45 வயதுக் குட்பட்டவர்களும், 10 வருடச்சேவை பூர்த்தி செய்தவர்களுமான சகல உள்ளூர் ஆசிரியர்களும் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நிகழவிருக்கும் இடமாற்றத்திற்குத் தயாராக இருக்குமாறு கல்விஇலாகா சமீபத்தில் வெளியிட்டுள்ள ஒருஅற்றறிக்கையில் அறிவித்துள்ளது.

## மாணிக்கவாசகர் விக்கிரகம்

யாழ்ப்பாணம், சனி

சாந்தையர்மடம்- ஸ்ரீகற்பக விநாயகர் கோவில்சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரின் முயற்சியால் உருவாக்கப் பெற்ற மாணிக்கவாசகர் விக்கிரகம் நேற்று முன்தினம் மங்கள வாத்தியத்துடன் மேற்படி ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. திரு. மு. சுப்பிரமணிய ஆச்சாரி இத் திருவுருவத்தை உருவாக்கினர்.

## முல்லைத்தீவிற்கு விளையாட்டு மைதானம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவில் விரைவில் விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான முயற்சியைமுல்லைத்தீவு பட்டினசபைத் தலைவர் திரு. அ. சந்தியாப்பிள்ளையும் மற்றும் அங்கத்தவர்களும் மேற்கொண்டுள்ளனர்.

## பரீட்சை

சங்கானை. சனி

அம்பாறை தொழில் நுட்பப் பயிற்சிக்கூட வருட இறுதிப்பரீட்சைகள் இம் மாதம் 27ந்திகதி ஆரம்பமாகின்றன.

## 'ஈழநாடு' வார மலர் 18-9-67

O தலையங்கத்தைப் படித்துவிட்டு ஆவேசத்துடன் வந்த பெரியார் ஈ. வெ. ரா. வாசலில் வந்ததும் ஏன் திரும்பிச் சென்றார்? கே. பி. எச். [ஆசிரியர் கே. பி. ஹரன்] எழுதும் யாத்திரைக் கடிதத்தில் இவ்வாரம் அறிந்து கொள்ளுங்கள்.

O சகோதரி நிவேதிதா தேவியைச் சந்தித்த பின்னர் தான் பாரதி, பெண்கள் உரிமையை உணர்ந்தார்- 'காலம் வறக்காத கவிஞன்' தொடர் கட்டுரையில் இவ்வாரம் இதற்கு விளக்கம்கிடைக்கிறது.

O குறளிவித்தையா? குண்டலினி சக்தியா என்று வி. என். பி. கேட்பது என்ன?

O இலக்கிய இரசனையை வளர்க்க இரசிகமணி கனக. செந்திநாதன் கூறும் யோசனைகள்.

O ''குறிஞ்சிப் பூ'' [சிறுகதை], 'மயிலன்' எழுதும் 'வெறுப்பு', கவிதைகள், குடும்பச்சுடர், கலை அரங்கம், சோதிடக் கலாநிதி அளிக்கும் எதிர்காலம் பற்றிய பதில்கள், மற்றும் வழமையான பல சுவையான அம்சங்களுடன்-

இலங்கைவரும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பற்றிய கட்டுரைகளும்-

இவ்வார 'ஈழநாடு' வார மலர் உங்களுக்கு விருந்தளிக்க காத்திருக்கிறது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதியிலுள்ள இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org